# இஷ்டி என்றால் என்ன?

பாலு சரவண சர்மா, ஸ்ரீதணிகை பஞ்சாங்கம்

இஷ்டி என்றால் அமாவாசை அல்லது பவுர்ணமி திதியின் கடைசி 4ம் பாகமும் பிரதமை திதியின் முதல் 3 பாகமும் வியாபித்த திதி காலமாகும்.

இஷ்டி காலத்தில் தேவர்கள் பூஜை இடத்தின் அருகில் வசிக்கிறார்கள் என்கிறது லோகாக்ஷியும் ஸ்ம்ருதி இது குறித்தி விரிவாக அறிய வைத்தியநாத தீக்ஷிதரின் ஸ்ம்ருதி முக்தா பலம் நூலில் திதி நிர்ணய காண்டம் மற்றும் பிராயசித்த காண்டமும் எனும் பிரிவில் படித்தறியவும்

### இஷ்டியில் செய்ய தக்கவை

ஹோமங்களும் செய்ய மிகவும் உகந்த காலமாகும்

### இஷ்டி கணிதம்

பிரதமை மற்றும் பஞ்சமதசி(அமா அல்லது பௌ) திதிகளின் உதயாதி காலத்தை கூட்டினால் பிரதமை திதி உதயத்தில் உள்ள அன்றைய அகஸ்(பகல்மானம்) காலத்தைக்காட்டிலும் கூடினால் பிரதமை அன்று இஷ்டி. பகல்மானத்தை காட்டிலும் குறைந்தால் முன்னாள் அமா/ பௌ உதயத்தில் இருக்கும் அன்று இஷ்டி

### போதாயன இஷ்டி

போதாயன அமாவாசை கடைபிடிப்பவர்களுக்கு இஷ்டி அன்று சந்திரதரிசனம் சிலாக்கியமில்லை என்பதால் அவர்களுக்கு போதாயன அமாவாசை அடுத்த நாள் போதாயன இஷ்டியாகும். அதாகில் அமாவாசை திதி உதயத்தில் உள்ள நாளில் இஷ்டி வரும். இது வருடத்தில் அரிதாகவரும் போதாயன அமாவாசைக்கு மட்டும் பொருந்தும்

#### இஷ்டி - சஷ்டி - சந்திர தரிசனம் என்ன தொடர்பு ?

இவை மூன்றிற்கும் எந்த ஒரு தொடர்பும் அறவே இல்லை.

- இஷ்டி பிரதமை திதி தொடர்புடையது,
- சஷ்டி பிரதமையிலிருந்து ஆறாம் நாள்
- சந்திர தரிசனம் என்பது அமாவாசை அடுத்த இரண்டாம் நாள் அன்று சூரிய அஸ்தமனத்திற்கு பின் சந்திர அஸ்தமனம் முடிவதற்குள் வளர்பிறை துவிதியை திதி இருத்தலாகும்.(பிறை தென்படுதல்)

**துன்முகி (2016-17) வருட இஷ்டி நாட்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சித்: 9, 24 | வை: 9, 23 | ஆனி: 7, 21 | ஆடி: 5, 19 | ஆவ: 3, 17 | புர: 1, 15, 30 |
| ஐப் 15, 30 | கார்: 15, 29 | மார் 15, 29 | தை: 15, 29: | மாசி: 15, 29 | பங் 15, 29 |

**ஸ்ரீதணிகை பஞ்சாங்கம்**

திருக்கணித வானவியல் பஞ்சாங்கம்

www.thanigaipanchangam.com